Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

THURSDAY, MARCH 17, 2022

வியாழக்கிழமை மார்ச் 17, 2022 | ஒளி: 07 கதிர்: 258 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# "எமது உறவுகளே எமக்குத் தேவை"

விஜயரத்தினம் சரவணன்



ஒரு இலட்சம் ரூபாய்க்கும் மேலதிகமாக, பலமடங்கு தொகையை நாம் அரசாங்கத்திற்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை கண்டு பிடித்து எம்மிடம் அரசாங்கம் ஒப்படைக்க வேண்டும் என முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோரின் நெருங்கிய உறவினருக்கு,

தொடர்ச்சி P2



# "என்னை நம்புங்கள்"

- சகலரிடமும் ஜனாதிபதி வினயமாகக் கேட்டுக்கொண்டார்.
- தட்டுப்பாடுகளை நன்கறிவேன்.
- கடுமையான முடிவுகளை எடுப்பேன்.
- நான் செய்யும் செயல்களுக்கு நானே பொறுப்பு.
- 10 பில்லியன் டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.
- உங்கள் அழைப்பின் பேரிலேயே அரசியலுக்கு வந்தேன்.
- சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பயணம்.
- நம்பிக்கைக்குப் பங்கம் விளைவிக்க மாட்டேன்.
- பிரச்சினைகளுக்கு கூட்டாக தீர்வு காண்பதே சிறந்தது.

இன்று ஒரு சவாலான நேரத்தில் நான், உங்களிடம் உரையாற்றுகிறேன் என தனதுரையை ஆரம்பித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு முதலில் கேட்டுக்கொண்டார்.

"நான், செய்யும் செயல்களுக்கு நானே பொறுப்பு" எனத் தெரிவித்த ஜனாதிபதி, கடுமையான முடிவுகளை எடுப்பதற்கும் உறுதிபூண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டுமக்களுக்கு நேற்று (16) இரவு ஆற்றிய உரையின் போதே, மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P3

# "20 தவறு"

## அன்று கையைத் தூக்கிய வாசு, இன்று கண்டுபிடித்தார்

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தவறானது என்றும், அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே ஆட்டம் அரங்கேற்றப்படுகின்றது என்றும் நேற்று (16) தெரிவித்த நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,

தொடர்ச்சி P2

மோடியை சந்தித்தார் பசில்

# இலங்கைக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார்



இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, அந்நாட்டின் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று (16) சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைக்கு இந்தியா வழங்கும் நிதி உதவிக்காக இந்திய பிரதமருக்கு நிதி அமைச்சர் நன்றி தெரிவித்ததுடன், இலங்கைக்கு வருமாறும் அழைப்புவிடுத்தார்.

தொடர்ச்சி P2



# இலங்கையருக்கு சிங்கப்பூரில் 'பொது மனப்பான்மை' விருது

பிரதான வீதியில் பயணித்த வாகனங்கள் மீது, வாளால் தாக்குதல் நடத்தியது மட்டுமன்றி, நபரொருவரையும் தாக்க முயற்சித்த சம்பவம் சிங்கப்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அதுதொடர்பிலான வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

தொடர்ச்சி P2



போராட்டம் கைவிடப்பட்டது;

# பௌசர்கள் ஓடுகின்றன

எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கத்தால் செவ்வாய்க்கிழமை (15) நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த வேலைநிறுத்தம், நேற்று (16) பிற்பகல் கைவிடப்பட்டது. எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகேவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, தமது வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்துக்கான கட்டணத்தை 60% அதிகரிக்குமாறு கோரி, செவ்வாய்கிழமை நள்ளிரவு முதல் இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் வேலை நிறுத்தப்

தொடர்ச்சி P2




# மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

கடந்த பெப்ரவரி மாதத்துக்கு பின்னர், ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலருக்கும் குறைந்துள்ளதாகவும் அதற்கமைய செவ்வாய்கிழமையன்று பீப்பாயொன்றின் விலை 98 டொலராகக் குறைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2



# "பதுக்கவே வேண்டாம்"

பொதுமக்கள், தேவையில்லாமல் டீசலை தொடர்ந்தும் சேகரித்தால் டீசல் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என எரிசக்தி அமைச்சு எச்சரித்துள்ளது.

இது நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் தேவையில்லாமல் டீசலை பதுக்கி

தொடர்ச்சி P2



ஐ.நா 49ஆவது அமர்வில்

# இலங்கைக்கு மாபெரும் வெற்றி

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில், இலங்கை பிரதிநிதிகள் முன்வைத்த வாதப் பிரதிவாதங்களால் இலங்கை மாபெரும் வெற்றியைப் பெற முடிந்ததாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று (16) தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (16) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அமர்வில் கலந்து கொண்ட 45 நாடுகளில், 32 நாடுகள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை

தொடர்ச்சி P2

# பயங்கரவாதத் தடுப்பு சட்டமூலம் மீது விவாதம்

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டு, எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (16) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டது என பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 'லிட்ரோ' இடைநிறுத்தம்; காத்திருக்கிறது லா:.ப்ஸ்




எரிவாயு தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துக்கான டீசல் தட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக, உற்பத்தி மற்றும் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம், நேற்று (16) அறிவித்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு

தொடர்ச்சி P2

# மலையகத் தமிழரின் அபிலாஷைகள் ஆவணம் ஜப்பானிய தூதுவரிடம் கையளிப்பு



மலையக தமிழர் அபிலாஷைகள் அடங்கிய ஆவணம், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷியிடம், தமிழ் முற்போக்கு கூட்டணியால் நேற்று (16) கையளிக்கப்பட்டது.

ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் வைத்து, அந்த ஆவணத்தை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கையளித்தனர்.

மலையக தமிழர் எதிர்நோக்கும் சவால்கள், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம்,

தொடர்ச்சி P2

# "மருந்து இன்றி மரணித்தால் பசிலே பொறுப்பாளி"



புற்று நோய் அல்லது இருதய நோய்க்கான மருந்து தட்டுப்பாடு காரணமாக ஒருவர் உயிரிழந்தால், அவர்களின் மரணத்துக்கு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பொறுப்பேற்க வேண்டும் என, பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “20 தவறு”

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எஃப்) நிபந்தனைகளுக்கு இணங்க செயற்படும் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றப் போவதில்லை என்றார்.

அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் நீடிப்பதா, இல்லையா என்பதை எதிர்காலத்தில் தீர்மானிப்பதாக தெரிவித்த அமைச்சர் வாசுதேவ, “எனது இராஜினாமா கடிதத்தை எழுதுவதற்கு ஒரு நிமிடமே எடுக்கும்” என்றார்.

தான் இன்னும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சராக இருப்பதாகவும், தான் அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யும் வரையிலும் நீர் கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இரட்டைக் குடியுரிமை கொண்ட எவருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட மாட்டாது என அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய போது எட்டப்பட்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் மீறியுள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு உடன்படும் போது, வெளிநாட்டு பிரஜாவுரிமை கொண்ட

> **நான் இன்னும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சராக இருக்கிறேன். நான் அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யும் வரையிலும் நீர் கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்கப் போவதில்லை**

எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்துக்குள் பிரவேசிப்பதற்கு அல்லது அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு தாங்கள் உடன்படவில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும், இந்த விடயத்தின் அடிப்படையில் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதிக்கு அறிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தனது பிரஜாவுரிமை தொடர்பில் தமக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மாற்றியமைப்பதற்காகவே 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற விரும்புவதாகவும், பசிலையோ வேறு எந்த நபரையோ பாராளுமன்றத்துக்குக் கொண்டு வருவதற்காக அல்ல என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

எனினும், பல நாள்களுக்குப் பின்னர் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றத்துக்குள் பிரவேசிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# பௌசர்கள்...

போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. போக்குவரத்துக்கான கட்டணத்தை 60% அதிகரிக்குமாறு கோரி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சங்கத்தினர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், “டீசல் விலை அதிகரிப்பை மாத்திரம் குறித்த கட்டண அதிகரிப்பின் போது கருத்திற்கொள்வதாக தெரிவித்திருந்தது. எவ்வாறாயினும், டீசல் விலை அதிகரிப்புக்கு மேலதிகமாக, அமெரிக்க டொலர் பெறுமதி அதிகரிப்பையும் கருத்தில் கொண்டு தங்களுடைய கட்டணத்தையும் திருத்தியமைக்குமாறு தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அந்தக் கோரிக்கைக்கு இணங்காததையடுத்தே நிலுவையில் உள்ள எரிபொருள் கையிருப்புகளை விநியோகிக்க முடியாது எனவும் சுமார் 800 பௌசர்கள் போக்குவரத்தில் ஈடுபடாது என சங்கம் குறிப்பிட்டிருந்தது.

அதன்பின்னரே எரிசக்தி அமைச்சருடனான பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிடுவதாக சங்கம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத்...

அன்றையதினம் பாராளுமன்றம் மு.ப 10 மணிக்குக் கூடவிருப்பதுடன் மு.ப 11 மணி முதல் பி.ப 4.30 மணி வரை பயங்கரவாத தடுப்பு( தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறும்.

மார்ச் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதம் 23ஆம் திகதியும், பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டமூலம் 24ஆம் திகதியும் இடம்பெறும்.

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பெற்றி வீரக்கோன், தங்கேஸ்வரி கதிரமன், எம்.எஸ். செல்லசாமி, ஜெஸ்டின் கலப்பதி ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் 25 ஆம் திகதி முன்வைக்கப்படும்.

# இலங்கைக்கு வருமாறு...

எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதி இலங்கையால் நடத்தப்படும் பல துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டில் கலந்து கொள்ளுமாறே நிதியமைச்சரால் பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதேவேளை, இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை நிதியமைச்சர், புதுடெல்லியில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், உதவி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி உள்ளிட்ட உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்து அமைச்சர் பசில் கலந்துரையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# “பதுக்கவே...

வைப்பதைத் தவிர்க்குமாறு பொதுமக்களைக் கோருவதாகவும் அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர். ஒல்கா தெரிவித்தார். எரிபொருளை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் இருப்பதாகக் கூறிய அவர், எனினும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எரிசக்தி அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்க டொலர் பற்றாக்குறையால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாக பொதுமக்கள் பல மணிநேரம் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த சில வாரங்களாக நாட்டில் திட்டமிடப்பட்ட மின்வெட்டு அமல்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ‘லிட்ரோ’ இடைநிறுத்தம்:...

எரிவாயு ஏற்றி வந்த இரண்டு கப்பல்களை விடுவிக்க முடியாமல் போனதே தற்போதைய நிலைமைக்கு காரணம் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்தது.

இதற்காக டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு வாரங்களாக அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், தேவையான டொலர்களைப் பெறுவதற்கான கடன் கடிதங்களைத் திறக்க முடியவில்லை என்று இரண்டு நிறுவனங்களும் தெரிவித்தன.

இதேவேளை, லாஃப்ஸ் நிறுவனம் தமது செயற்பாடுகளை நிறுத்தவில்லை என்றும் எரிவாயு வாங்குவதற்கான கடன்கடிதங்களை வங்கிகள் திறக்கும் வரை காத்திருப்பதாக லாஃப்ஸ் நிறுவன தலைவர் டபிள்யூ. கே.எச்.வேகபிட்டிய, நேற்று (16) தெரிவித்தார்.

பெரிய நிறுவனமொன்று எப்படி செயற்பாடுகளை நிறுத்த முடியும் என்று கேள்வியெழுப்பிய அவர், கடன் கடிதங்கள் திறப்பட்ட பின்னர் நாங்கள் இயல்பு நிலைக்குத் திரும்புவோம் என்றார்.

உலக சந்தையில் பெற்றோல், டீசல், எல்பி எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் வங்கிகளில் இருந்து ஒரு சிறிய தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அது நிவர்த்தி செய்யப்பட்டதும் நாங்கள் இயல்பு நிலைக்கு திரும்புவோம் என்று அவர் உறுதிப்படுத்தினார். கடந்த ஆறு நாள்களுக்கு முன்பு 30,000 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டுக்கு வந்தடைந்த பின்னர், இரண்டு நாள்களுக்குள் உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

கடுமையான எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கொழும்பு உட்பட நாடளாவிய ரீதியில் பல உணவகங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “மருந்து இன்றி...

மக்கள் வரிசைகளில் நிற்கும் துன்பங்களுக்கு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ முழுப்பொறுப்பேற்க வேண்டும் எனவும் நிதியமைச்சரின் தவறுகளால் எரிவாயு, எரிபொருள், மருந்துகளைப் பெறுவதற்கு பெரும்பாலான பொதுமக்கள் வரிசையில் நிற்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு பொருட்களை இறக்குமதி செய்ய 20.6 பில்லியன் அமெரிக்க டொலரை செலவிட்டதாகவும், அதில் மருந்து, மருத்துவ உபகரணங்கள், எரிபொருள், எரிவாயு, நிலக்கரி இறக்குமதிக்காக 4.6 பில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே செலவிடப்பட்டு உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்காக கிட்டத்தட்ட 6 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டதாகவும் பொருளாதாரத்தை பலவீனப்படுத்த நிதியமைச்சர் வேண்டுமென்றே நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

# மலையக தமிழர்...

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதை தொடர்ந்து, வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை பற்றியும் ஏனைய சமூகங்களை பற்றியும் ஓரளவு அறிந்துள்ளதாகவும், இனிமேல் மலைநாட்டு தமிழ் மக்களை பற்றி மேன்மேலும் அறியவும், அவர்களுக்கு உதவிடவும் ஜப்பானிய அரசும் மக்களும் விரும்புவதாக ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, த.மு.கூ. தலைவர்களிடம் கூறியுள்ளார் என மனோ கணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்து.

இலங்கையில் வாழும் நான்கு பிரதான இனக்குழுக்களில், மலையக தமிழரையும் தனித்துவம் கொண்ட ஓர் இனக்குழுவினராகத் தாம் இனிமேல் குறித்துக்கொள்வதாகவும், ஜப்பானிய தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் உறுதியளித்தார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.







## முல்லைத்தீவில் காத்திருந்த மக்கள்

முல்லைத்தீவு பஸ் தரிப்பிடத்துக்கு அருகில், எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் நடவடிக்கையை, சமையல் எரிவாயு விநியோகத்தர்கள் நேற்று (16) காலை முன்னெடுத்தனர்.

குடும்ப அட்டையை காண்பித்து ஒரு குடும்பத்துக்கு ஒரு சமையல் எரிவாயு சிலிண்டர் என்றடிப்படையில், பதிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

500 வரையான சமையல் எரிவாயு சிலிண்டர்களே மக்களுக்கு வழங்கப்பட்ட போதும் பலர் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்ள முடியாது திரும்பி சென்றுள்ளார்கள்.

(படங்கள்: செ. கீதாஞ்சன்)

# “எமது உறவுகளே...

குடும்ப மறுவாழ்வுக்காக ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படும் ஒரு இலட்சம் ரூபாயை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நீதி அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் முன்வைத்த ஆலோசனைக்கு அமைச்சரைவை அங்கிகாரம் வழங்கியிருந்தது.

இந்நிலையில் கடந்த 1,832 நாள்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய தீர்மானத்தையும் நீதி அமைச்சர் அலி சப்ரியின் இத்தகைய ஆலோசனையையும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா ஆகியோர், ஊடக சந்திப்பொன்றை நேற்று (16) நடத்தினார்.

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஊடாக ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடும், காணப்படவில்லை என்ற சான்றிதழ், அல்லது மரணச்சான்றிதழ் வழங்கிவைக்க இருப்பதாக அறிகின்றோம் எனத் தெரிவித்த அவர், அந்த மரணச்சான்றிதழோ, அல்லது காணவில்லை என்ற சான்றிதளோ எமக்குத் தேவையில்லை என்றார்.

இராணுவத்திடம் எமது உறவுகளை நாம், ஒப்படைத்திருக்கின்றோம். அவ்வாறு ஒப்படைத்த உறவுகளை இவர்கள் என்ன செய்தார்கள்? இந்த அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி, எமது உறவுகளின் பெறுமதி ஒரு இலட்சமா என வினவிய அவர், எமது உறவுகளின் உயிர் ஒரு இலட்சம் எனத் தீர்மானிப்பதற்கு இவர்கள் யார் என்றும் கேட்டார்.

எமது உறவுகளுக்குப் பதிலாக, இவர்கள் ஒரு இலட்சம் தரவேண்டாம். இவர்களுடைய ஒரு இலட்சம் ரூபாய் பணத்திற்கு மேலதிகமாக, பலமடங்கு தொகையை நாம் அரசாங்கத்திற்கு கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். நாம் அவர்களிடம் கையளித்த உறவுகளை எம்மிடம் கையளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# இலங்கையருக்கு...

இந்நிலையில், அந்த நபரை இலங்கையரான அமில சிந்தனா (வயது 35) என்பவரே மடக்கிப்பிடித்துள்ளார். விநியோக சேவை நிறுவனமொன்றை வைத்திருக்கும் அமிலவுக்கு சிங்கப்பூரிலுள்ள அங் மோ கியோ பொலிஸ் பிரிவால் ‘பொது மனப்பான்மை’ விருது வழங்கப்பட உள்ளது.

ஆயுதம் ஏந்திய ஒருவரால் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதலைத் தடுத்து, பொதுமக்களுக்கு அதிக தீங்கு விளைவிக்காமல் தடுத்து நிறுத்தியதற்காக, அவருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

சிங்கபூரிலுள்ள புவாங்காக் கிரசன்ட்டில் போக்குவரத்துச் சந்தியில் அமில காத்திருந்தார். அப்போது, சாமுராய் ரக வாளை ஏந்திவந்தவர்கள், வீதியில் பயணித்த வாகனங்களின் மீது தாக்குதல் நடத்தினர். சுமார் 5 வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இதனை, தன்னுடைய திறன்பேசியின் ஊடாக அமில, பதிவு செய்துகொண்டிருந்தார். அப்போது அமிலவின் அருகில் வாளுடன் வந்தவர், மூன்று முறை சரமாரியாக வெட்டினார். இதனால், அமிலவின் இடது தோள்பட்டை, கழுத்து மற்றும் இடது கையில் மூன்று காயங்கள் ஏற்பட்டுள்ளன.

வாள் வெட்டில் ஈடுபட்ட 37 வயதானவர் விழுந்துவிட்டார். அதன்பின்னர், அவருடைய இரண்டு கால்களையும் அமில பிடித்துக்கொண்டார். பின்னர், அவ்விடத்துக்கு ஓடோடி வந்த இன்னும் சிலர், தாக்குதல் தாரியிடமிருந்த வாளைப் பிடுங்கி வீசிவிட்டு, இறுக்கிப் பிடித்துக்கொண்டனர். பின்னர், அங்கு விரைந்த பொலிஸார் தாக்குதல்தாரியை அழைத்துச் சென்றுவிட்டனர்.

தாக்குதல்தாரி, இனந்தெரியாத மாத்திரைகளை உட்கொண்டிருந்தமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. பொதுமக்களுடன் சிறிது நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதன் பின்னரே, வீதியின் குறுக்காக வந்து இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளார்.

# இலங்கைக்கு...

ஏற்றுக்கொண்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இலங்கையின் கருத்து உண்மை மற்றும் நியாயமானது என்று நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட நாடுகள் கருதுவதாகவும் இலங்கை தொடர்பான அறிக்கைகளில் 85 சதவீதமான உள்ளடக்கங்கள் உள்விவகாரங்கள் தொடர்பானவை என்றும் வெளிநாட்டு சமூகங்களைப் பற்றியது அல்ல என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை தொடர்பான பல்வேறு வாய்மொழி மற்றும் எழுத்துபூர்வ அறிக்கைகளை அவ்வப்போது தொடர்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தலைவர்களிடம் தமது பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் இந்த அளவு செல்வாக்கு செலுத்துவதன் நோக்கம், மற்றும் அனைத்து நாடுகளும் சமமாக நடத்தப்பட வேண்டுமா மற்றும் அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமா என்றே அவர்கள் கேள்வியெழுப்பினர் என்றார்.

# மசகு எண்ணெய்...

கடந்த ஒரு மாதமாக ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 120 டொலரை நெருங்கி வந்த நிலையில், மார்ச் 7ஆம் திகதி 17 வருடங்களுக்கு பின்னரான பாரிய அதிகரிப்பை சந்தித்திருந்தது.

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான யுத்த சூழ்நிலை காரணமாக மசகு எண்ணெய் விலை சடுதியாக உயர்ந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

உக்ரேன் மீதான படையெடுப்புக்குப் பின்னர், உலகின் மிகப்பெரிய மசகு எண்ணெய் மற்றும் எரிபொருளை ஏற்றுமதி செய்யும் நாடான ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்வதை ஏராளமான நாடுகள் தவிர்த்தன. அத்துடன், மசகு எண்ணெய் விலையும் அதிகரித்திருந்தது.

ரஷ்யாவுடனான போர்நிறுத்தம் மற்றும் உக்ரேனில் இருந்து ரஷ்ய துருப்புகளை திரும்பப் பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாக உக்ரேனிய பேச்சாளர் தெரிவித்ததையடுத்து, விலை குறைந்ததுடன், விலையில் ஏற்ற இறக்கம் தொடரும் என்று பலர் எதிர்பார்ப்பதாகவும் அந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால்

# மீன்பிடித் தொழில் பாதிப்பு

■ ரஸீன் ரஸ்மின்



மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் கற்பிட்டி, வன்னிமுந்தல், துறையடி, சின்னக்குடியிருப்பு, ஆனவாசல், தொட்டுப்பொல உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1,500 இற்கும் அதிகமானோர் தமது ஜீவனோபாய தொழிலாக மீன்பிடித் தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நாளாந்தம் கடற்தொழிலுக்கு தேவையான மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு காணப்படுவதாக மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக எரிபொருள் நிலையத்திலும், மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குகின்ற வர்த்தக நிலையங்களிலும் நீண்ட நேரம் வரிசையில் காத்து நிற்கின்ற போதிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள, நாளொன்றுக்கு கரையிலிருந்து 40 கிலோ மீற்றர் தூரம் சென்று வர 100 லீட்டர் வரை மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும், மீனவர் ஒருவருக்கு 20 லீட்டர் வரை வழங்கப்படுவதால் ஐந்து நாளைக்கு சேமித்து வைத்த மண்ணெண்ணெய்யை பயன்படுத்தியே ஒரு தடவைக்கு மீன்பிடித் தொழிலுக்காக பயணிக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் கற்பிட்டி மீனவர்கள் கூறுகின்றனர்.

இதனால், கடந்த சில நாட்களாக நூற்றுக்கணக்கான பீன்பிடி இயந்திர படகுகள் கற்பிட்டி கரையோர பகுதிகளில் தரித்து நிற்பதையும் அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறு அன்றாட மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளதால், மீனவர்களினதும், மீன்பித் தொழிலாளர்களினதும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, மீன்பிடி தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு தேவையான மண்ணெண்ணெயை வழங்குவதற்கு அரசாங்கம் விஷேட திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் எனவும் கற்பிட்டி மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பசிலுக்கு மீண்டும் நோட்டீஸ்

அமைச்சர் பசில் ராஜபக்ஷ , நிதியமைச்சராக பதவி வகிப்பதற்கு எதிராக, கட்டளையை பிறப்பிக்குமாறு கோரி, உலப்பனே ஸ்ரீ லுமங்கல தேரர், தாக்கல் செய்த ரிட் மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அமைச்சர் பசில் ராஜபக்ஷவை மே மாதம் 12ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நேற்று (16) மீண்டும் உத்தரவிட்டுள்ளது.

ஊழல் ஒழிப்பு முன்னணியின் தலைவர் உலப்பனே ஸ்ரீ சுமங்கல தேரர், பாரிய ஊழல், மோசடி தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் லெசில் டீ சில்வா மற்றம் சுராஜ் வல்கம ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் பிரதிவாதிகளாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, சட்டமா அதிபர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நிதியமைச்சர் அமெரிக்க பிரஜை என்பதுடன், மற்றுமொரு நாட்டின் பிரஜைக்கு இலங்கையின் நிதியமைச்சராக செயற்பட முடியாது என்றும் அது அரசியலமைப்பை மீறுவதுடன் இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்றும் மனுதார்ர்கள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.





## நீர்கொழும்பில் பல எரிபொருள் நிலையங்களுக்குப் பூட்டு

■ ஷாஜஹான்

நீர்கொழும்பு நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எவ்வித எரிபொருளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதுடன், பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

நகர மத்தியில் அமைந்துள்ள சிப்பெட்கோ எரிபொருள் நிலையத்தில் மாத்திரம் நேற்று (16) காலை பெட்ரோல் விநியோகிக்கப்பட்டது.

எனினும், நீர்கொழும்பு- தழுவகொட்டுவ சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையம் மூடப்பட்டிருந்ததுடன், பொதுமக்கள் கேன்களுடனும் வாகனங்களும் டீசலுக்காக காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை- கொச்சிக்கடை தோப்பு பாலம் அருகில் அமைந்துள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (16) காலை பெட்ரோல் விநியோகிக்கப்பட்டதால் அங்கு நீண்ட வரிசை காணப்பட்டது.

வழிப்பிள்ளையார் விவகாரம்

## அதிகாரியுடன் கலந்துரையாடல்

■ பி.கேதீஸ்



நுவரெலியா- ஹட்டன் பிரதான வீதியில் லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோவிலை பொது மக்களின் வணக்கஸ்தலமாக பெற்றுகொள்ள கோரி பொதுமக்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு இணங்க, இலங்கை இந்து கலாசார திணைக்களத்தின் ஊடாக விசேட கலந்துரையாடலொன்று தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (15) நடைபெற்றது.

இதன்போது, தனிநபரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் இந்த வழிப்பிள்ளையார் கோவிலை பொது மக்களின் வணக்க ஸ்தலமாக பெற்று தருமாறு கோரி பிரதேச மக்கள் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில், அங்கு வருகை தந்திருந்த இலங்கை இந்து கலாசார திணைக்களத்தின் உத்தியோகத்தர் கல்பனா பிரதேச மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டதுடன் இதுதொடர்பான அறிக்கை ஒன்றையும் உயர் அதிகாரிகளுக்கு சமர்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில், தலவாக்கலை -லிந்துலை நகர சபை தலைவர் லெட்சுமன் பாரதிதாஸன், தலவாக்கலை கதிரேசன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# “என்னை நம்புங்கள்”

உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதே போன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நானே பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண கடுமையான முடிவுகளை எடுக்க இன்று நான் உறுதிபூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஓர் ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன். இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன். எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மக்களின் சிரமங்களை நன்கு அறிந்த ஒருவர். நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் இருந்த படைவீரர் மற்றும் யுத்தத்தில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது.

இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல. முழு உலகமும் ஏதோ ஒரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கொவிட் நோய்த் தொற்றினால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம்.

இந்த நெருக்கடி ஒரு போதும் என்னால் உருவாக்கப்பட்டதொன்று அல்ல. அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றனர். இந்நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கிறேன்.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு நாட்டின் அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் பொறுப்பு ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு கூட்டாக தீர்வு காண்பதேயாகும் என்றார்.

இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் நமது அந்நிய செலாவணி நெருக்கடி ஆகும் எனத் தெரிவித்த அவர், ரூபாய் நெகிழ்வுடன் இயங்குவதற்கு இடமளிக்கப்பட முன்னர் இருந்த நிலைமையின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்கள் ஆகும். கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.

அண்மைக்கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத்துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழிநுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 03 பில்லியன் டொலர்கள் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்கள் கிடைக்கும். அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்போது 11.9 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்படும்.

ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக

> நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம்

2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆனால் ரூபாய் நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலரில் இருந்து 20 பில்லியன் டொலர்கள் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும். அப்படியானால், வர்த்தக பற்றாக்குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம். அதன்படி, நமது வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், நமது அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் நாம் செயற்பட வேண்டும்.

இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையை திருப்பிச் செலுத்துவது குறித்து நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடல் மூலம் நாம் எதிர்பார்ப்பது, ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வுசெய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன்.

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவை பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது. இந்த பிரச்சினையை முன்கூட்டியே கண்டுகொண்டதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம். மேலும், உள்நாட்டில் நமது தேவைகளை பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம். அதேபோன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, அந்த பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது காண்கிறோம்.

இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும். சராசரியாக, நமது இறக்குமதிச் செலவில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனால்தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. நம் நாட்டில் வாகனங்களுக்கு மட்டுமின்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

அதனால்தான், முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி குறித்த நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன்.

எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

கொவிட் தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெற்று வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேபோன்று, தகவல் தொழிநுட்பம்

> கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் இருந்த படைவீரர் மற்றும் யுத்தத்தில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது

மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் துரிதப்படுத்துவதால், இத்துறைகள் மூலம் நாட்டுக்கு வரும் வருமானம் அதிகரித்து வருகிறது.

நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புகளால் கூட பாராட்டப்பட்டது. தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் என்னிடம் பாதுகாப்பு, ஒழுக்கம், நவீனமயமான அபிவிருத்தி அடைந்த நாடு, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி ஆகியவற்றையே கேட்டீர்கள். எனது பதவிக்காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆரோக்கியமான தாய் நாட்டில் எனது எதிர்கால பதவிக்காலத்தை அந்த அடிப்படை இலக்குகளுக்காக அர்ப்பணிப்பேன்.

அமைச்சரவை, பாராளுமன்றம் மற்றும் அரச ஊழியர்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, எமது பிள்ளைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்காக, எம்மிடம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நாம் ஒரு குழுவாக இலட்சியத்துடனும் தியாகத்துடனும் செயற்படுவதையே ஆகும்.

உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன் என்றார்.



எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

# கடிதத்தை சமர்ப்பிக்கவும்

## கிளிநொச்சியில் வளப் பங்கீடு ஆராய்வு

■ மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் வள பங்கீடு தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியுடன் மாவட்டச் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல், நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

வீட்டுப் பாவனைக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தை வாராந்தம் 5 லீற்றர் வீதம் குடும்ப அட்டை ஊடாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்க இக்கலந்துரையாடலில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறிப்பாக விவசாயம், மீன்பிடித்துறைகளுக்கான விநியோகத்தை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் உறுதிப்படுத்தலுடன் கூடிய கடிதத்தை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் மாவட்டச் செயலக அதிகாரிகள், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதி, பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

தமிழர்களுடைய

# உயிரின் மதிப்பு ஒரு இலட்சமா?

## தமிழினத்தை நீதி அமைச்சர் மலினப்படுத்துகின்றார்

■ கனகராசா சரவணன்



காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் மரணித்தவர்களுக்கு ஒரு இலச்சம் ரூபாய் கொடுப்பனவு எனத் தெரிவித்த நீதி அமைச்சர், ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற, மனித நேயத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுகின்ற ஒருவர் என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "நீதி அமைச்சர் வெளியிட்டிருப்பது ஒரு வேதனையான விடயம். தமிழர்களை இவர்கள் எவ்வாறு, எந்தளவுக்கு மட்டிட்டு வைத்திருக்கின்றார்கள் என்பது இதில் புலனாகிறது.

"தமிழர்களுடைய உயிர் ஒரு இலச்சம் ரூபாய் பெறுமதி என்ற அடிப்படையில், இவர்கள் விடயத்தைக் கையாளுவதையிட்டு நாங்கள் மன வேதனையுடனான எதிர்ப்பை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"இந்த நாட்டில் தமிழ் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அரசாங்கம் அது சம்பந்தமாக எந்தவிதமான நியாயமான வழிகளில் விடயங்களைக் கையாள்வதற்கு தயாரில்லை என்பது வெட்டவெளிச்சமாக காண்பிக்கப்படுகின்றது.

"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமக்கான நியாயங்களைப் பெற்றுத்தர வேண்டுமென நீண்டகாலமாக சர்வதேசத்தை கோரி வருகின்றனர். இந்தக் கால கட்டத்தில் நீதி அமைச்சர் முன்வைத்திருக்கின்ற இந்த விடயத்தின் மூலம், தமிழர்களை இந்த அரசாங்கம் மிக மோசமாக கையாளுகின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளது" என்றார்.

ஹெரோய்னுடன்

# பெண் உட்பட மூவர் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம், கலட்டி பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் நேற்று முன்தினம் (15) இரவு கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பனிப்புலம், கலட்டி பகுதியிலுள்ள வீடொன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது வீட்டில் ஒரு கிராம் 70 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதையடுத்து, அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் 36 வயது பெண்ணை கைது செய்தனர்.

தொடர்ந்து நடத்தப்பட்ட மேலதிக விசாரணை மற்றும் சோதனை நடவடிக்கையின் போது சங்கானையை சேர்ந்த 27 வயது இளைஞனும், கொலன்னாவ, வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.




## கதை சொல்லும் படங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, பாடசாலை மாணவர்களையும் பாதித்துள்ளமையை பாடசாலை நிகழ்வுகளில் மாணவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.
கிளிநொச்சி, கந்தபுரம் இல.01 பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் போது, வினோத உடைப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கள், எரிபொருள் நெருக்கடி தொடர்பாக தமது ஆற்றுகையை படத்தில் காட்சிப்படுத்தியவாறு வெளிப்படுத்தியிருந்தனர்.
(படங்கள்: நடராசா கிருஸ்ணகுமார்)

# தீ அனர்த்த ஒத்திகை



■ வி.சுகிர்தகுமார்

தீ அனர்த்தத்தின் போது பொதுமக்கள் செயற்படவேண்டிய விதம் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்முறை பயிற்சி, அக்கரைப்பற்று பஸ் தரிப்பிட நிலையத்தில் நேற்று (16) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் எம்.ஏ.எம். றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு செயற்பாட்டில் அதிகளவான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், அக்கரைப்பற்று மாநகர சபை, இராணுவத்தினர், பொலிஸார், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை, அரச திணைக்களங்கள், நிறுவனங்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இவ்விழிப்புணர்வு செயற்பாட்டில் அக்கரைப்பற்று மாநகர சபை மேயர் அதாவுல்லா அஹமட் சகி, மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது பஸ் தரிப்பிடத்தில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்த மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் அழைக்கப்பட்டு, தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.




## தொடரும் காத்திருப்புகள்

மட்டக்களப்பு நகரில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் டீசல், பெற்றோலை பெறுவதற்கு வாகனங்கள் காத்திருப்பதுடன், மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காகவும் மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.
(படங்கள்: க. சரவணன்)



விலையேற்றத்துக்கு எதிராக

# சைக்கிள் பேரணி

■ எம்.றொசாந்த் , என்.ராஜ். வி.நிதர்ஷன்

யாழ். வலி. வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, நேற்று (16) நடைபெற்ற நிலையில், அப்பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களும் சைக்கிளில் பேரணி சென்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, மல்லாகத்திலிருந்து பிரதேச சபை அமர்வுக்கு சைக்கிளில் பேரணியாக சென்றனர்.

# யாசகரின் சடலம் மீட்பு

■ செந்துூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம், பாசையூர் பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் ஆண் ஒருவரின் சடலம், பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் தொடர்ச்சியாக யாசகம் பெற்று வந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் உயிரிழந்தவரின் உடலில் காயங்கள் உள்ளதாகவும் அவரின் பெயரை அறிய முடியாத நிலை உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


சடலத்தை மீட்டு, சட்ட வைத்திய அதிகாரி ஊடாக உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



சிறுவனுக்கு

# பாலியல் துன்புறுத்தல்; ஆசிரியருக்கு பிணை

■ எம். றொசாந்த்



யாழ்., தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 13 வயது மாணவனுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் புரிந்த குற்றச்சாட்டில் கைதான ஆசிரியருக்கு, சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

மேற்படி சிறுவனுக்கு, ஆசிரியர் ஒருவர் ஓரின பாலியல் தொடர்பான துன்புறுத்தல்களை புரிந்து வந்த நிலையில் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவன், சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவன் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆசிரியர், திங்கட்கிழமை (14) கைது செய்யப்பட்டு, சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (15) ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, வழக்குத் தொடர்பில் விசாரித்த நீதவான் அந்தோனிப் பிள்ளை யூட்ஸன், ஆசிரியருக்கு பிணை வழங்கினார்.

சிறுவர் பராமரிப்பு காரியாலயத்தின் கிளை

# திறந்துவைப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான், ஏ.எச்.ஏ. ஹுஸைன்

கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் வாகரை நீதி நிர்வாக பிரிவுக்கான அலுவலகம், நேற்று முன்தினம் (15) திறந்து வைக்கப்பட்டது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி நிஸ்வாணி நிபாஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் அதிதிகளாக மாகாண சுகாதார சுதேச வைத்திய, சமூக சேவைகள், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் கிராமிய மின் மயமாக்கல் அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், வாகரை பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ.அருணன், திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி சரண்யா சுதர்ஸன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் எம்.எம்.எச்.நயீமுத்தீன் ஆகியோர் உட்பட திணைக்கள நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் காணிகள்

# பறிபோவதை ஏற்க முடியாது




■ ஏ.எம்.கீத், ஹஸ்பர்

இந்திய, இலங்கை அரசாங்கத்தின் மூலம், சம்பூர் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சூரிய மின் சக்தி திட்டத்தின் ஊடாக, தமிழ் மக்களின் காணிகள் பறிபோகுமா என்ற பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக 'ரின்கோ சேவ்' அமைப்பின் தலைவர் எஸ் எச். கிரிசாந்த குமார் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், "இந்தியாவின் அரசியல் உள் நோக்கம் தான் என்ன எனத் தெரியவில்லை. சிறுபான்மை மக்களுடைய காணி அபகரிப்பு ஒரு போதும் இத் திட்டத்துக்காக இடம்பெறக்கூடாது.

"2015 இல் அனல் மின் நிலையம் இதே பகுதியில் அமையவுள்ளதை மக்கள் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது. மீண்டும் இவ்வாறு தமிழ் மக்களுடைய காணிகளை அபகரிப்பதை நிறுத்த வேண்டும்.

"அன்றாடத் தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் 200 வருடங்களுக்கும் மேலான பழங்குடி மக்கள் எனப் பல சமூகத்தவர்கள் வாழ்ந்து வரும் கிராமமே திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பகுதியில் உள்ள சம்பூர் ஆகும்.

"எனவே, தமிழ் மக்களுடைய காணி, இத் திட்டத்தின் ஊடாக அபகரிக்கப்படாமல் செயற்பட வேண்டும். இதனை அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்" என்றார்.

# “இறக்கும் முன் துறந்து போ”

## வடிவேல் சுரேஸ் எம்.பி ஆவேசம்

நாட்டு மக்கள் பட்டினியில் இறப்பதற்கு முன்னர், அரசாங்கம் வீடு செல்ல வேண்டுமென பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் நேற்று முன்தினம் (15) ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “வரலாறு ஒரு போதும் கண்டிராத மிக மோசமான ஆட்சி அரங்கேறிக் கொண்டிருக்கிறது. நாட்டில் தெளிவான திட்டங்கள் இன்றி, தான்தோன்றித்தனமாக இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.



எனவே, இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதி அவர்களே! நீங்கள் பெயில், ஆகையால் தயவுசெய்து நாட்டை நடத்தக்கூடிய தலைமையிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு வீடு சொல்லுங்கள்” என்றார்.

இந்த நிலைமை நீடித்தால் பிணங்களுக்கே, ஜனாதிபதியாக இருக்க நேரிடும். எனவே, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவால் மக்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இதன் வெளிப்பாடே மக்கள் வீதிகளில் இறங்கி இருக்கின்றார்கள் என்றார்.

வரிசைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தேர்தல் அறிக்கை வெளியிடுவதை போன்றே, மணித்தியாலத்துக்கு ஒருமுறை பொருட்களின் விலை ஏற்ற அறிக்கையும் வெளியிடப்படுகின்றது என தெரிவித்த அவர், முட்டாள்தனமான முடிவுகள், நாட்டின் எதிர்கால சந்ததிகளின் வாழ்வை சூனியமாக்கக் கூடும். அரசாங்கத்தை எம்மிடம் கொடுத்துவிட்டு வீடு செல்லுங்கள் என்றார்.



### லொறி கவிழ்ந்ததில்
# மூவருக்கு காயம்

துவாரகஷான்

டயகம வெஸ்ட் தோட்டத்திற்கு சொந்தமான லொறி 70 அடி பள்ளத்தில் கவிழ்ந்ததில், காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டகலை எரிபொருள் நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொண்டு, தோட்டத்துக்கு திரும்பிக்கொண்டிருந்த போது, நேற்று (16) அதிகாலை ஒரு மணிக்கு ஆகுரோவா பகுதியில் வைத்து பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதன்போது, லொறியின் சாரதி உட்பட மூவர் காயமடைந்தனர். அதிலொருவர் மேலதிக சிகிச்சைக்காக, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு. மாற்றப்பட்டுள்ளார்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்கு காரணமென, ஆரம்பக் கட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை டயகம மற்றும் அக்கரப்பத்தனை பொலிஸார் முன்னெடுக்கின்றனர்.



## பயிற்சிப் பட்டறை...

பெருந்தோட்ட யுவதிகளுக்கு ‘வெற்றிகரமான பண முகாமைத்துவம்’ தொடர்பிலான பயிற்சிப் பட்டறை நுவரெலியா டெவோன் விடுதியில் நேற்று (16) காலை நடைபெற்றது. நுவரெலியா பெரண்டினா அமைப்பின் நலன்புரி நிறுவனத்தின் அனுசரணையின் கீழ், நுவரெலியா கிளை முகாமையாளர் பிரசன்ன இந்திரஜித் தலைமையில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதன்போது இந்நிறுவனத்தின் நுண்நிதி அதிகாரி எஸ். தனலக்ஷன் ‘வெற்றிகரமான பண முகாமைத்துவம்’ தொடர்பில் விரிவுரையாற்றினார். (ஆ. ரமேஸ்)



# கத்திக்குத்தில் முடிந்த காதல்

மஹேஸ் கீர்த்திரத்ன

ஒரு மாணவியை மூன்று மாணவர்கள் காதலித்த விவகாரத்தால் மாணவனொருவன், இரண்டு மாணவர்கள் மீது கத்தியால் குத்திய சம்பவம், மாத்தளை சிறுவர் பூங்காவுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

மாத்தளை நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் இருவர் மீது கத்தியால் குத்திய, மற்றுமொரு பாடசாலையின் மாணவன் நேற்றுமுன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலில் காயமடைந்த மாணவர்கள் இருவரும், மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் கழுத்து, தலை என்பவற்றில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவியொருவர் மீதான காதல் விவகாரமே, இச்சம்பவத்துக்கு காரணம் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்ட மாணவன், மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# தபால் ரயில் ஓடும்

ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பு கோட்டைக்கும் பதுளைக்கும் இருவழி சேவையில் ஈடுபட்டிருந்த இரவு தபால் ரயில், மார்ச் 19ஆம் திகதியிலிருந்து மீண்டும் சேவையில் ஈடுபடவுள்ளதென, ஹட்டன் ரயில் நிலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பதுளைக்கான ரயிலானது, தினமும் இரவு 8.50 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிப்பதுடன், மற்றைய இரவு தபால் ரயிலானது, பதுளையிலிருந்து தினமும் மாலை 5.50க்கு கொழும்பை நோக்கி பயணிக்கவுள்ளது. இந்தச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### பசறை பிரதேச சபை உறுப்பினர்
# ‘யாசக’ போராட்டம்

ராமு தனராஜா, எம்.செல்வராஜா

மக்கள் தற்போது பிச்சையெடுக்கும் நிலைக்கு வந்துள்ளதை எடுத்துக்காட்டும் விதமாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை பிரதேச சபை உறுப்பினர் சுகிதானந்தன் கார்த்தீஸ்வரன் , யாசகம் செய்யும் ( பிச்சையெடுக்கும்) நூதனப் போராட்டமொன்றை முன்னெடுத்தார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்துக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இந்தப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் (15) முன்னெடுத்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கண்டித்து, கொழும்பில், ஐக்கிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டமொன்றை நேற்று முன்தினம் (15)




முன்னெடுத்திருந்த, சந்தர்ப்பத்திலேயே, குறித்த நூதனப் போராட்டத்தை கார்த்தீஸ்வரன் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டுக்குத் திரும்பியவர் வீட்டுக்கு வரவில்லை

எம். செல்வராஜா

பதுளை, மாணிக்கவள்ளி பெருந்தோட்டத்தைச் சேர்ந்த 42 வயது நிரம்பிய மூன்று பிள்ளைகளின் தந்தையான, கணேசன் கலைச்செல்வன் காணாமல் போயிருப்பதாக, அவரது மனைவி டி. பொன்மணி, பதுளை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (15) முறைப்பாடு செய்துள்ளார்.

கட்டார் நாட்டில் தொழில் செய்து வந்த கணேசன் கலைச் செல்வன், நாட்டுக்குத் திரும்பியுள்ளார். எனினும், மாதங்களாகியும், இதுவரை வீடு வரவில்லையென அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

பல மாதங்கங்களுக்கு முன்பே இலங்கைக்கு, திரும்பிவிட்டதாகவும், அவர் இலங்கையில் எங்கு இருக்கின்றார் என்பது தமக்கு தெரியாதென்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கூறியதாக, அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இப்படத்தில்



காணப்படும் கணேசன் கலைச்செல்வனை அறிந்தவர்கள், கண்டவர்கள் எவருமிருப்பின், அவரது மனைவியான டி. பொன்மலர் என்பவருடன் - 075-3425661 என்ற அலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(குறிப்பு: இந்த அலைபேசி இலக்கம் செயலிழந்து உள்ளதாக, வாசகர் பலரும் எமது கவனத்துக்குக் கொண்டுவந்தனர். எனினும், அவ்வப்போதே அந்த அலைபேசி இலக்கம் இயங்குகின்றது என்பது கண்டறியப்பட்டுள்ளது)

### ஹட்டன் நகரில்
# குடிநீருக்கு கட்டுப்பாடு

ரஞ்சித் ராஜபக்ஷ

மலையகத்தில் நிலவி வரும் வரட்சியுடனான வானிலையால் குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் ஹட்டன் நகருக்கு நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் மாத்திரமே நீர் விநியோகிக்கப்படும் என ஹட்டன் நீர்வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய,ஹட்டன் நீர்வழங்கல் சபையால் நீர் பெற்றுக்கொள்ளப்படும் சிங்கமலை நீர்த்தாங்கி, ஒட்டரி நீர்த்தாங்கிகளின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளமையே குறித்த நீர்மட்டுப்பாட்டுக்கு காரணம் என நீர்வழங்கல் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.எனவே, நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் விநியோகிக்கப்படும் நீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



பதுளை சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் 18 பேர், சித்தியடைந்துள்ளனர். இப் பரீட்சையில் 76 பேர் தோற்றியிருந்தனர்.

சித்தியடைந்த 18 பேரில் கதிரேசன் தபிசான்- 178 புள்ளிகளைப் பெற்று, வித்தியாலயத்திற்கு பெருமையைப் பெற்றுக்கொடுத்ததுடன், 72 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருப்பதும் விசேட அம்சமாகும்.

இதற்கமைய, கே. தபிஷன்- 178, எஸ். வருணாஸ்கர்- 170, எஸ். கவினாஸ்- 169, டி.திவியேஸ்- 165, ஆர். லோகிஷன்- 164, எஸ். சதுர்ஜன்- 163 வை.மகஜன்- 161, எஸ். ராகுல்- 161, எஸ். திலுக்ஷன்- 157, ஜி. சவினாஷ்- 156, எம்.என்.ஏ. சர்ஹான்- 156, டி. ரிஷிகாந்- 152, ஏ.கே.ஏ. தாலிஸ்- 152, எஸ். சுபீக்ஷன்- 151, எம். தனுஜன்- 150, ஆர். ஹேரம் ஸ்ரீ ப்ரணவ்- 149, எஸ். ஜிஸ்ணு- 148, வி. எட்வின் செஹான்- 147 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்றுள்ளனர்.



நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டம் 03 ஹோல்புறூக் நு/ போட்மோர் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ. யசிந்தன் 150 புள்ளியையும் எல். பபிஷான் 147 புள்ளியையும் பெற்று பாடசாலைக்கும் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

அத்தோடு 11 மாணவர்கள் 100க்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றுள்ளமை பாடசாலைக்கு கிடைத்த சாதனையாகும். அந்த வகையில் வீ. யுனேஷா- 127, எஸ்.ஹாதிக்- 125, என்.பிரகலாதன்- 118, டி.விக்னேஷ்- 113, டி. ஜெஹான்- 111, கே. தர்ஷிகா- 109, வீ. ஜேசுவா- 105, என். கௌசிக்கா- 103, வை. திவாணி- 100 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (மலைவாஞ்ஞன்)



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையில் 35 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர் என அதிபர் கே.சிவலிங்கம் தெரிவித்தார்.

பாடசாலையிலிருந்து 2021 ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு 178 மாணவர்கள் தோற்றி, 35 பேர் சித்திபெற்றுள்ளனர்.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 20 சதவீதமானவர்கள் சித்தி பெற்றுள்ளதுடன் இதில் 101 இற்கும் 145 இற்கும் இடையில் 80 மாணவர்களும்,70 இற்கும் 100 இற்கும் இடையில் 42 மாணவர்களும் பரீட்சையில் புள்ளிகளை பெற்றுள்ளனர்.

அதனடிப்படையில், மகேந்திரன் லக்ஷான்-182, பிரபாகரன் சுபிக்ஷன்-177, பிரதாப் பிரஸ்காபெபி-170, சிவகுமார் லபிக்ஷா-168, தயாபரன் ரதுஷன்-165, நரேஸ்குமார் தனுஷிகா- 165, ராமு லித்திஸ்கர்- 164, ஜொசிலியா மைரா தியாகராஜா- 164, ராமராஜ் மதுஷிகா- 163, ரஜினிகாந்த் ரக்ஷிகா- 163, லலித்குமார் நிக்ஷனா- 161, சண்முகராஜா சதுர்ஷன்- 160, ஜோன் ஜெரோனா- 160, லெட்சுமிகாந்தன் லக்ஷன்- 159, அந்தோனி அலோசியஸ் கெவில்சன்- 159, யசோதரன் டிலாஷன்- 158, ஜெயசந்திரன் அபிஷாலினி- 158, புருசோத்தமன் ஆதர்ஷினி நாயர்- 158, பத்மராஜ் நிமேஸ் விபுஷிதா- 156, சிவகுமார் சுபனிஜா- 155, சிவகுமார் கிருத்திக்ஷனா- 154, முரளிதரன் முஹாரனி- 153, உதயபாலன் யுகேஷ்- 152, சாந்தகுமார் ஹம்சதீபன்- 152, பிரபாகர் ருக்ஸாலினி- 152, பாலசந்திரன் ஹரினியா- 151, விஜயகுமார் யஸ்வின்- 149, ஸ்ரீகாந்தன் சஜீதா- 149, சுபசீலன் டில்ருக்ஷா- 148, விநாயகமூர்த்தி தன்யஸ்ரீ- 148, ஞானராஜா சாரணி- 148, வரதராஜன் திவ்யா- 148, யோகநாதன் கபிலன்- 147, ராஜமாணிக்கம் ஹிமேதா 147, லோகேஸ்வரன் கேஷவி 146 புள்ளியை பெற்றுள்ளார். (மலைவாஞ்ஞன்)

# கையளித்த உறவுகளுக்கு விலை நிர்ணயிக்கும் அயோக்கியத்தனம்

ஒவ்வொரினது வாழ்க்கையில், இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிராமல் இருப்பதற்கான சந்தர்ப்பமே குறைவு எனலாம். அதாவது, பெறுமதியான பொருளொன்றை வாங்கிப் பார்க்கும் ஒருவர், அவ்வாறான பொருளொன்றை வாங்கவே இல்லையென கையை விரித்துவிடுவர்.

அதுமட்டுமன்றி பெறுமதியான பொருட்களை இரவல் வாங்கிச் செல்வோரும், அப்படியே சுருட்டிக்கொண்டு மாயமாகிவிடுவர்; அல்லது, "காணவில்லை" எனக் கண்முன்னே நாடகமாடுவர். எமது நாட்டைப் பொறுத்தவரையில், 'காணவில்லை' என்பது ஒவ்வொரு நாளும் பேசுபொருளாக இருக்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் வேளைகளில், 'காணாமலாக்கப்பட்டவர்கள்' மீதான கரிசனை, ஆட்சிப்பீடத்தில் இருப்போருக்கு கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். ஆனால், தங்களுடைய உறவுகளைக் கையளித்தவர்கள், அவர்களின் வருகைக்காக கடந்த 13 வருடங்களாகக் காத்திருக்கின்றனர். காத்திருந்தவர்களில் பலரும், ஏங்கி, ஏங்கியே இறந்துவிட்டனர்.

ஆனாலும், இலங்கை படையினரிடம் கையளிக்கப்பட்டு, காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவுகளுக்கு நடந்தது என்ன? என்பதைத் தேடும் போராட்டம் தீவிரமாகியுள்ளது. இறுதி யுத்தத்தின் போது, ஏற்பட்ட இழப்புகளை இலகுவில் மதிப்பிட்டு விடமுடியாது. உயிர்களை காப்பாற்றிக்கொள்வதற்காக, சரணடையுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நம்பி, பலரும் தங்களுடைய சொந்தங்களை கையளித்தனர். அதன்பின்னர், அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலுள்ளது?

பல ஆணைக்குழுக்களின் முன்பாக, உறவினர்கள் வாக்குமூலமளித்துள்ளனர். இந்நிலையில்தான், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஒரு முறை மட்டுமே ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும். அத்துடன், 'காணவில்லை' அல்லது 'மரண சான்றிதழ்' வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அப்படியாயின், தகவல்கள் கைவசமிருக்கின்றன. அவை, இன்னும் காணாமலாக்கப்படவில்லை. அந்தத் தகவல்களை அம்பலப்படுத்துவதற்கு அரசாங்கம் அஞ்சுவது ஏன்? இன்றேல், 'பழைய குருடி, கதவைத் திறவடி' என்பதற்கு இணங்க, மீண்டும் ஆணைக்குழுவை அமைத்து, காலம் கடத்தப்படப்போகிறதா?

உறவுகளுக்கு நடந்தது என்ன? என்பதை தெரிந்துகொள்வதே உறவினர்களின் ஒரேயொரு கோரிக்கையாக இருகின்றது. நட்டஈட்டு அறிவிப்பை உறவினர்கள் மறுத்துவிட்டனர். அப்படியாயின், எந்த அடிப்படையில், இவ்வாறானதோர் அறிவிப்பை அரசாங்கம் விடுத்தது.

ஐ.நாவுக்கு பூசி மெழுகும் அறிவிப்பை விடுத்திருக்கும் அரசாங்கம், கையளித்த உறவுகளுக்கு விலையை நிர்ணயித்து இருப்பது பெரும் அயோக்கியத்தனமாகும்.

இறுதி யுத்தத்தின் போதும், அதன் பின்னரும் கையளிக்கப்பட்ட உறவுகளே தேடப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அதற்கு முன்னர் இடம்பெற்ற புரட்சிகளின் போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களை அல்ல என்பதை நினைவில் கொண்டு, நட்டஈட்டை வழங்கி குரலை நசுக்கும் முயற்சியை கைவிட்டுவிட்டு, நியாயமான முடிவை வழங்கவேண்டும்.

'காணவில்லை', 'மரண சான்றிதழ்' வழங்கப்படுமாயின் இரண்டிலும் எப்போது, எங்கே? உள்ளிட்ட காரணங்களை குறிப்பிட வேண்டும். அதில், எவ்வாறான காரணங்களை அரசாங்கம் குறிப்பிடும் என்பதெல்லாம் எம்முன் இருக்கும் கேள்விகளாகும். என்றாலும், இந்த விடயத்துக்கு மற்றுமோர் ஆணைக்குழு அமைக்கப்பட்டு காலமும் கடத்தப்படும் என்பதே உண்மை.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பயம் எனும் உணர்வு பல தோல்விகளை உருவாக்கி விடுகின்றது. அச்சம் செயல்களுக்கு விரோதி; எந்தச் செயல்களைச் செய்ய விழைந்தாலும் பதட்டத்தையும் சந்தேகத்தையும் உருவாக்கி விடுகின்றது.

திறமைமிகு மாணவர்கள் கூட, பரீட்சை எழுதப் பதட்டப்படுவது உண்டு. நேர்முகப் பரீட்சையின்போது, பய உணர்வால் பேசத் தயங்குவதுண்டு. மனிதனுக்கு மனிதன் பயப்பிட வேண்டிய அவசியமில்லை. தெரிந்த விடயங்களை சொல்லத் தயங்குவதும் எவருடனும் உரையாடாமல் ஒதுங்குவதும் துணிச்சலற்ற செயலாகும். மக்களோடு மக்களாகப் பழகுங்கள். வெட்கம், அச்சம் எல்லாமே அகன்றுவிடும்.

வாழும் முறையில் அச்சத்தை வலிந்து திணிக்கலாகாது. எதையும் எதிர்கொள்ளாமல் வாழ முடியாது. துணிச்சல், வீரம் மனச்சோர்வை நீக்கும்; இயங்குவதை வேகமாக்கும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் உணர்த்தும் செய்தி



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது சகோதரர்களையும் ஆட்சியை விட்டுவிட்டு, வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்தி, ஐக்கிய மக்கள் சக்தி செவ்வாய்க்கிழமை (15) நடத்திய போராட்டத்தால் கொழும்பு அதிர்ந்தது.

ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள், ஜனாதிபதி செயலக வளாகத்துக்குள் நுழைந்து, ராஜபக்ஷர்களின் உருவப் பொம்மைகளை எரித்தார்கள். வழக்கமாக கட்சிகள், அமைப்புகள் நடத்தும் போராட்டங்களில் இருந்து, இந்தப் போராட்டம் பெருமளவு மாறுபட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஒழுங்கு செய்திருந்தாலும், பங்குபற்றியவர்களில் கணிசமானவர்கள் கடந்த காலத்தில் ராஜபக்ஷர்களுக்கு வாக்களித்தவர்கள்; அவர்களுக்காக போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள். ஆனால், இம்முறை ராஜபக்ஷர்களுக்கு எதிராகவே வீதிக்கு வரவேண்டிய கட்டாயத்தை, காலம் அவர்கள் மீது திணித்திருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்து வைத்திருக்கும், ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் இந்தப் போராட்டம், புதிய புதிய வடிவங்களில் இனி தொடரச் செய்யும். அதுபோல, அனைத்து எதிர்க்கட்சிகளும் ராஜபக்ஷர்களுக்கு எதிரான போராட்டங்களை, நாடு பூராவும் மக்களின் பெரும் பங்களிப்போடு நடத்திக் காட்டும்.

ஏனெனில், இன்றைக்கு ராஜபக்ஷர்களுக்கு எதிரான மக்களின் எழுச்சி என்பது, தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அதுவும் தென் இலங்கை மக்கள், ராஜபக்ஷர்களை தேசத்தின் காவலர்கள், அபிவிருத்தி நாயகர்கள் என்கிற தேர்தல் கால பரப்புரைகளை நம்பி வாக்களித்தவர்கள். அந்த நம்பிக்கையை, ஆட்சிக்கு வந்த இரண்டு வருடங்களுக்குள் ராஜபக்ஷர்கள் பொய்யாக்கினார்கள். எரிபொருட்களுக்கான வரிசை, சமையல் எரிவாயுவுக்கான வரிசை, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு என்று நாடே அல்லாடுகின்றது. வரிசைகளில் காத்திருப்பு என்பது, பல மணித்தியாலங்கள் என்கிற அளவைத் தாண்டி, நாள்கணக்கில் என்றாகிவிட்டது!

> **❝ ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் ஏற்கெனவே பெரும் கோபத்தோடு இருக்கும் மக்களைக் கட்டுப்படுத்துவது இயலாமல் போய்விடும் என்கிற எச்சரிக்கை உணர்வே, ராஜபக்ஷர்களை அடக்கி வாசிக்க வைத்திருக்கின்றது. இல்லையென்றால், ராஜபக்ஷர்களுக்கு ஆயுதப் பலப் பிரயோகம் என்பது இயல்பான ஒன்றுதான்**

சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்ட போது, மண்ணெண்ணை அடுப்புக்கு மாறிய மக்கள், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட போது, மின்சார அடுப்புக்கும், விறகு அடுப்புக்கும் மாறினார்கள். மின்சார அடுப்புக்கு மாறிய மக்கள் மீது, ஏழு மணித்தியால மின் தடை, அதிலும் பிரச்சினையை தோற்றுவித்தது.

இன்றைக்கு நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், ராஜபக்ஷர்களை திட்டித்தீர்க்கும் காட்சிகளை காணலாம். மக்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து, எந்தவித கரிசனையும் இன்றி செயற்பட்ட ராஜபக்ஷர்களின் பொருளாதார அணுகுமுறை, மக்களை நடுத்தெருவுக்கு இறக்கி விட்டுள்ளது.

வழக்கமாகத் தங்கள் ஆட்சிக்கு எதிரான போராட்டங்களை, ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கும் ராஜபக்ஷர்கள் இம்முறை அடக்கி வாசிக்க முனைகிறார்கள். ஏனெனில், ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம், ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிடும் நோக்கிலேயே நடத்தப்பட்டது. ஆனால், அது ஜனாதிபதி செயலக வளாகத்துக்குள் நுழைந்து, சீற்றத்தை வெளிப்படுத்தும் அளவுக்கு மாறியது.

சவப்பெட்டியையும் உருவ பொம்மைகளையும் ஜனாதிபதி செயலக வளாகத்துக்குள் கொண்டு வந்து, போராட்டக்காரர்கள் எரிக்கும் மட்டும் பொலிஸாரும் பாதுகாப்புத்தரப்பினரும் அமைதியாக இருந்ததையே காண முடிந்தது.

இதற்கு முன்பு இவ்வாறான போராட்டங்கள், ஜனாதிபதி செயலக வளாகத்தை அண்மிக்கும் முன்பே கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டும், தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டும் போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு இருப்பார்கள்.

ஆனால், இந்தப் போராட்டத்தின் போது, பாதுகாப்புத் தரப்பினருக்கு தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும் சூழல் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக பலப்பிரயோகம் தவிர்க்கப்பட வேண்டும் என்கிற உத்தரவு ராஜபக்ஷர்களால் வழங்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகின்றது.

> **❝ ராஜபக்ஷர்களின் தோல்வியைப் பிடித்துக் கொண்டு ஆட்சிக்கு வருவது மாத்திரம், சஜித்துக்கோ அவரது அணிக்கோ இலக்காக இருக்குமானால், எதிர்காலத்தில் ராஜபக்ஷர்கள் இன்று எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடியை அவர்களும் சந்திக்க நேரிடும். அப்போது, மீண்டும் ராஜபக்ஷர்கள் வீதிக்கு இறங்குவார்கள்**

ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் ஏற்கெனவே பெரும் கோபத்தோடு இருக்கும் மக்களைக் கட்டுப்படுத்துவது இயலாமல் போய்விடும் என்கிற எச்சரிக்கை உணர்வே, ராஜபக்ஷர்களை அடக்கி வாசிக்க வைத்திருக்கின்றது. இல்லையென்றால், ராஜபக்ஷர்களுக்கு ஆயுதப் பலப் பிரயோகம் என்பது இயல்பான ஒன்றுதான்.

இன்னொரு பக்கத்தில், ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஆட்சியை யார் பிடிப்பது என்கிற போட்டியில் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தின் பங்காளியான சுதந்திரக் கட்சியும் இருக்கின்றன. ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் வல்லமை, ஐக்கிய மக்கள் சக்திக்கே இருக்கின்றது என்கிற நம்பிக்கையை, நாட்டு மக்களிடத்தில் ஏற்படுத்தும் ஓட்டத்தில், சஜித் பிரேமதாஸ முந்த நினைக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலிலும், அதன் பின்னரான பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷர்களிடம் பெருந்தோல்வியைக் கண்ட சஜித், அடுத்த பத்து வருட காலத்துக்குள் ஆட்சியைக் கைப்பற்றுவது இலகுவான காரியமல்ல என்கிற உணர்வோடுதான் இருந்தார்.

ஆனால், ராஜபக்ஷர்களின் தற்போதைய ஆட்சித் தோல்வி, அவரை இலகுவாக ஆட்சியை கைப்பற்றுவதற்கான ஏதுகைகளை உண்டு பண்ணியிருக்கின்றது. ஓர் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய அரசியலை, கடந்த இரண்டு ஆண்டுகளில் சஜித் முன்னெடுத்து இருக்கவில்லை. அவர், யால சரணாலயத்தில் பொழுது போக்குவதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார். மக்களின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தி இருக்கவில்லை.

ஆனால், இப்போது ஆட்சிக்கு எதிராக மக்களே வீதிக்கு இறங்கிவிட்ட பின்னர், சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்கிற ரீதியில் செயற்பட ஆரம்பித்திருக்கிறார். அத்தோடு ராஜபக்ஷர்களுக்கு மாற்றாக, மீண்டும் மைத்திரியும் புதிதாக சம்பிக்க ரணவக்கவும் தங்களைத் தென் இலங்கையில் முன்னிறுத்த ஆரம்பித்திருப்பது, தன்னுடைய இடத்தையே கேள்விக்குள்ளாக்கும் என்கிற பயம் சஜித்துக்கு ஏற்பட்ட பின்னரே, அவர் வீதிக்கு வந்திருக்கின்றார்.

மக்களும் ராஜபக்ஷர்களுக்கு எதிரான கோபத்தின் போக்கிலேயே, சஜித்தை நோக்கி வருகிறார்கள். இந்த இரண்டு புள்ளிகளையும் இணைத்தால், ராஜபக்ஷர்களை அகற்றலாம் என்பது ஏனையவர்களின் எண்ணம். அதற்காக சஜித்தை நோக்கி, தென் இலங்கையின் சிறிய கட்சிகளும் அமைப்புகளும் இம்முறை வரத் தொடங்கியிருக்கின்றன.

நாட்டின் பொருளாதார நிலை, தற்போதுள்ள நிலையில் தொடர்ந்தால் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி 300 ரூபாயை வரும் சில நாள்களில் எட்டிவிடும். அது, மக்கள் மீதான பொருளாதாரச் சுமையை இன்னும் இன்னும் அதிகமாக்கிவிடும். ஆறு மாதங்களுக்கு முன்னர் வாங்கிய பொருளொன்றை, இரண்டு மடங்கு பணம் செலுத்திப் பெற வேண்டி ஏற்படும்.

ஆனால், மக்களின் வருமானம் என்பது, கடந்த காலத்தைக் காட்டிலும் குறைந்து செல்லும் நிலையே நீடிக்கின்றது. எரிபொருட்கள் தட்டுப்பாடு, மின்தடையால் அனைத்துத் தொழிற்றுறைகளும் முடங்கிப் போய்விட்டன. தொழில்கள் முடங்கிவிட்டால், வருமானத்துக்கு ஏது வழி?

வருமானமே இல்லையென்றால் இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்துவிட்ட பொருட்களை எப்படி வாங்குவது? இந்த நெருக்கடியை ராஜபக்ஷர்களே ஏற்படுத்தி விட்டிருக்கிறார்கள்.

அப்படியான நிலையில், தெளிவான பொருளாதாரத் திட்டங்களோடு வரும் யாரையும், மக்கள் ஆதரிப்பதற்குத் தயாராகவே இருப்பார்கள். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, எவ்வாறான பொருளாதார மறுமலர்ச்சித் திட்டத்தை முன்வைக்கப்போகின்றது என்பது முக்கியமான கேள்வி.

ஏனெனில், ராஜபக்ஷர்களின் தோல்வியைப் பிடித்துக் கொண்டு ஆட்சிக்கு வருவது மாத்திரம், சஜித்துக்கோ அவரது அணிக்கோ இலக்காக இருக்குமானால், எதிர்காலத்தில் ராஜபக்ஷர்கள் இன்று எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடியை அவர்களும் சந்திக்க நேரிடும்.

அப்போது, மீண்டும் ராஜபக்ஷர்கள் வீதிக்கு இறங்குவார்கள். நாடு எந்தவித மீளெழுச்சியும் இன்றி படுபாதாளத்துக்கு சென்று கொண்டிருக்கும்.

## கடிதங்கள்

### பரீட்சை கொடுப்பனவை விரைவாக வழங்குமாறு கோரிக்கை

இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவி பரீட்சை மேற்பார்வையாளர்கள், மேலதிக பரீட்சை மேற்பார்வையாளர்கள், நோக்குநர்களுக்கான பரீட்சை கொடுப்பனவை, காலதாமதமின்றி விரைவாக வழங்குமாறு, பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் 2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பல போட்டிப் பரீட்சைகள், வினைத்திறன் பரீட்சைகள், க.பொ.த சாதாரண தரப் செய்முறை பரீட்சை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை போன்ற நிலையக்கடமை, மதீப்பிட்டு பணிகள், வங்கிகளால் நடத்தப்பட்ட பரீட்சை, AAT பரீட்சை உட்பட ஏனைய பரீட்சைக் கடமையில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவை காலதாமதமின்றி வழங்கக்கோரி, பரீட்சை கடமையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள், அதுதொடர்பான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டில் மனிதப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களின் விலையேற்றத்துக்கு மத்தியில், பரீட்சை கடமையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள் இன்றைய செலவுகள் அதிகரிப்புக்கு மத்தியில், பல பிரச்சினைகளை எதிர்நோக்கித் திணறுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள். நாட்டில் கூலித்தொழிலில் ஈடுபடும் தொழிலாளியின் நாளாந்த வேதனம் 2,500 ரூபாய்க்கு குறைவுபடாமல் வழங்கப்படும் இன்றைய சூழ்நிலையில், காலை முதல் மாலை வரையும் நடைபெறும் பரீட்சைக்கான கொடுப்பனவு போதாது என்றும் இது குறித்து கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கின்றனர்.

பைஷல் இஸ்மாயில்

சென்னை

# அரசியல் கட்சி தொடங்க விஜய் திட்டம்?

## தேர்தல் வியூக வகுப்பாளருடன் ரகசிய சந்திப்பு

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு முன்னர், தீவிர அரசியலில் ஈடுபடும் வகையில் புதிய கட்சி தொடங்கும்படி, விஜய் மக்கள் இயக்கத்தினர் வலியுறுத்தி வரும் நிலையில், நடிகர் விஜயை தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர் சந்தித்து பேசியுள்ளார்.

இது குறித்து, நடிகர் விஜய்க்கு நெருக்கமானவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் தி.மு.க ஆட்சியில் உள்ளது. அக்கட்சிக்கு வலுவான கட்டமைப்பு உள்ளது. அதே நேரம் பா.ஜ.கவை சார்ந்து அரசியல் நடத்திய அ.தி.மு.க தலைமையில் ஆளுமை இல்லாததால், பெரும் சரிவை சந்தித்து வருகிறது. ஆனால், அ.தி.மு.கவினர், தி.மு.கவுக்குச் செல்ல விரும்பவில்லை.

இந்நிலையில், விஜய் கட்சி தொடங்கினால், அவரை நோக்கி அ.தி.மு.கவினர் வர வாய்ப்பு உள்ளது. லோக்சபா தேர்தலுக்கு



முன்னர் கட்சியைத் தொடங்கி போட்டியிட்டால், குறைந்த பட்சமாக 10 சதவீதம் வாக்குகளை பெற்று, தி.மு.க - அ.தி.மு.கவுக்கு அடுத்த பெரிய கட்சியாக நிரூபிக்க வாய்ப்பு உள்ளது. அதன்பின்னர், 2026ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில், விஜய் கட்சி தலைமையில் கூட்டணி அமைக்க முடியும்.

இதேவேளை, பிரசாந்த் கிஷோரை விஜய் சந்தித்த பின்னர், மக்கள் இயக்கத்தின் பணிகளை உளவுத்துறை தீவிரமாகக் கண்காணிக்கத் தொடங்கியுள்ளது.

தீவிர அரசியலுக்கு விஜய் வந்துவிடுவார் என உதயநிதி தரப்பினர் கருதுகின்றனர். இதை, அவர்கள் இரசிக்கவில்லை. இதனால், விஜய்க்கு நெருக்கடி கொடுக்கவும் முயல்கின்றனர்.

இது குறித்து, சினிமா வட்டாரங்கள் கூறியதாவது:

உள்ளூராட்சி, நகர்ப்புற தேர்தல்களில், விஜய் ரசிகர் மன்ற ஆட்கள் சில இடங்களில் வெற்றி கிடைத்ததையடுத்து, விஜய் தீவிர அரசியலில் இறங்க விரும்புகிறார்.

ஆனால், நடிகர் விஜய்யும், நடிகர் ரஜினி போல தான். வெற்றி கிடைக்கும் என 100 சதவீதம் ஊர்ஜிதமாகத் தெரிந்தால் மட்டுமே எதிலும் களம் இறங்குவார். இல்லையேல் எடுத்த முயற்சிகளை சினிமா பட விளம்பரமாக்கி, படத்தை வெற்றி பெறச் செய்வார் என சினிமா வட்டாரங்கள் கூறின.

கர்நாடகா:

# ஹிஜாப் விவகாரம்: உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு

கர்நாடக, உடுப்பி குந்தாப்புராவில் உள்ள அரசு கல்லூரியில் மாணவ, மாணவியர் சீருடை அணிந்து வரவேண்டும் என அந்தக் கல்லூரி நிர்வாகம் அறிவித்ததை அடுத்து, இஸ்லாமிய மாணவிகள் சிலர் சீருடை மீது ஹிஜாப் அணிந்து வருவததற்கு கல்லூரி நிர்வாகம் தடை விதித்தது.

அந்தத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இஸ்லாமிய மாணவிகளான ரேஷ்மா பாரூக், காஜிரா மற்றும் அவரது தாய் உள்ளிட்டோர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்த நீதிபதிகள் கூறுகையில், "ஹிஜாப் இஸ்லாமிய சமுதாயத்தின் ஓர் அங்கமாக இல்லை. அரசின் சீருடை சட்டத்திற்கு அனைவரும் உட்பட்டவர்களே. எனவே ஹிஜாப் அணிவதற்கான தடை உத்தரவு தொடரும்" என கர்நாடக உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

நொய்டா:

# நரபலிக்காக சிறுமி கடத்தல்

உத்தரபிரதேச மாநிலம் நொய்டா பிரதேசத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஞாயிற்றுக்கிழமை (13) திடீரென காணாமல்போனார். அவரது பெற்றோர் எங்கு தேடியும் மகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர், பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸாரும் மாயமான சிறுமியைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். புதுடெல்லி, பாக்பத் பகுதியில் சிறுமி இருப்பது தெரிய வந்தது. உடனே பொலிஸார் அங்கு சென்று சிறுமியை பத்திரமாக மீட்டனர். பொலிஸ் விசாரணையில் பக்கத்து வீட்டை சேர்ந்தவர் சிறுமியை கடத்திச் சென்றது தெரிய வந்தது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்ததில், நரபலி கொடுப்பதற்காக சிறுமியை கடத்தி சென்ற தகவல் வெளியானது.

சிறுமியைக் கடத்திச் சென்ற நபருக்கு இன்னும் திருமணமாகவில்லை. திருமணத்துக்கு தொடர்ந்து தடை ஏற்பட்டதால், மந்திரவாதியை சந்தித்து தனது திருமண தடங்கல் பற்றி கூறியுள்ளார். அப்போது மந்திரவாதி, "ஹோலி பண்டிகையன்று நரபலி கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும்" என யோசனை தெரிவித்துள்ளார். இதையடுத்து அவர், பக்கத்து வீட்டில் வசித்து வந்த சிறுமியை கடத்தி, நரபலி கொடுக்க முடிவு செய்தார். சம்பவத்தன்று, சிறுமியிடம் நைசாகப் பேசி கடத்திச் சென்று, புதுடெல்லியில் வசித்து வரும் தனது சகோதரி வீட்டில் சிறுமியை அடைத்து வைத்தார்.

சிறுமியை நரபலியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றபோது, சிறுமியை மீட்டதால் நரபலி முயற்சி தடுக்கப்பட்டது. துரிதமாகச் செயற்பட்டு சிறுமியை மீட்ட பொலிஸாருக்கு 50 ஆயிரம் ரூபாய் சன்மானம் வழங்கப்பட்டது.

புதுடெல்லி:



# பேஸ்புக், ட்விட்டர் மூலம் சமூக நல்லிணக்கம் சீர்குலைக்கப்படுகிறது

## சோனியா காந்தி ஆதங்கம்

அதிகாரத்தின் துணையுடன் பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலம், சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயல்கள் நமது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என்று காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று (16) சோனியா காந்தி பேசுகையில், "தமது அதிகாரத்தை கைப்பற்ற, சமூக ஊடகங்களை துஷ்பிரயோகம் செய்யும் அபாயம் அதிகரித்து வருகிறது. அரசியல் கட்சிகள், அவர்களின் பினாமிக்கள் அவர்களின் அரசியல் கதைகளை வடிவமைக்க, பேஸ்புக், ட்விட்டர் போன்ற உலகளாவிய நிறுவனங்களை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

சமூக ஊடக நிறுவனங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் சமமான இடத்தை வழங்குவதில்லை. தவறான தகவல்கள், வெறுப்புப் பிரசாரங்கள் மூலம் இளைஞர்கள், வயதானவர்கள் தூண்டிவிடப்படுகின்றனர். இதனை பேஸ்புக் போன்ற நிறுவனங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளன.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தேர்தல் அரசியலில், பேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடக நிறுவனங்களின் தலையீடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். இது கட்சிகளுக்கும் அரசியலுக்கும் அப்பாற்பட்டது. யார் ஆட்சியில் இருந்தாலும் நமது ஜனநாயகத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

புதுடெல்லி:

# தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி

## மூத்த தலைவர்கள் போர்க்கொடி

உத்தர பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் மாநிலங்களில் சமீபத்தில் முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. இது தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை (13) கட்சியின் செயற்குழு கூட்டத்தை கூட்டி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவசர ஆலோசனை நடத்தினார். அதில், கட்சி அமைப்புகளில் அதிரடி மாற்றங்கள் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதன் முதற்கட்டமாக, தேர்தலில் தோல்வியை தழுவிய 5 மாநிலங்களின் காங்கிரஸ்



தலைவர்களை ராஜினாமா செய்யும்படி சோனியா காந்தி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் அஜய் குமார் லல்லு, பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் நவ்ஜோத் சிங் சித்து ஆகியோர் பதவியை இராஜினாமா செய்தனர்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியை சீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டு இருப்பதால் தலைமை பதவியில் இருந்து சோனியா, ராகுல் காந்தி விலக வேண்டும் என்று அந்தக் கட்சியின் மூத்த தலைவர் கபில் சிபல் போர்கொடி உயர்த்தியுள்ளார்.

ஆனால், இதற்குப் பதிலடி கொடுத்திருக்கும் ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெஹ்லாட், "கபில் சிபல் அடிப்படையில் ஒரு காங்கிரஸ்காரர் இல்லை. சோனியா, ராகுல் ஆகியோர், கபில் சிபலுக்கு பலமுறை வாய்ப்பு அளித்தும் அவர் காங்கிரஸ் கட்சியின் கலாசாரம் தெரியாதவராக இருக்கிறார்" எனச் சாடியுள்ளார்.

கல்விக்கு கரம் கொடுத்து

# வீட்டுக்கொரு பட்டதாரியை உருவாக்குவோம்

## 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பின் இரண்டாவது ஆண்டுவிழா இன்று



ஆர். ரமேஷ்வரன்- தலைவர்



ச. தயாளன்- செயலாளர்



ஆர்.அஜித்குமார் - பொருளாளர்



எம். செல்வராஜா

இரத்தினக்கல் ஒளி வீசும் இரத்தினபுரி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளிசார் தமிழ் மக்களினது வாழ்வில், ஒளி வீசுவதாகத் தெரியவில்லை. அம்மக்கள் இருள் சூழ்ந்த வாழ்வில் இன்னலுற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர். இம்மக்களை மீட்டெடுக்கும் பாரிய பணியில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு ஈடுபட்டு, இரண்டாவது ஆண்டு விழாவினை, இன்று 17-03-2022இல் இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெறும் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, கொண்டாடுகின்றது.

இவ் ஆண்டு விழாவின் போது, முழு மலையகத்திலிருந்தும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்களில் வறுமை நிலையைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக 10 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளை நிறைவு செய்து, அங்கிருந்து வெளியேறும் வரை புலமைப்பரிசில்கள் வழங்கும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

'கல்விக்கு கரம் கொடுப்போம்; வீட்டிற்கொரு பட்டதாரியை பெருந்தோட்டப் பகுதியெங்கும் உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளுக்கமையவே, 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பு கல்விசார் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

> அமைப்பின் சேவைகள், பதுளை, பசறை, தலவாக்கலை, லிந்துலை, கண்டி, மாத்தளை, களுத்துறை, தெனியாய போன்ற பிரதேசங்களையும் சென்றடைந்துள்ளன

இவ் அமைப்பு, கடந்து வந்த பாதையை நோக்குகின்ற போது, இலங்கையில் செயற்படும் நலன்புரி அமைப்புக்களில், 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பு குறுகிய காலத்திற்குள் அதிகளவு மக்கள் நலத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய ஒரே அமைப்பாகும். அவ்வகையில் மக்களின் நன்மதிப்பிற்கும், விசுவாசத்திற்கும் 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பு பாத்திரமாகியுள்ளது.

தொலைநோக்கும், இலட்சியமும், அர்ப்பணிப்பும் கொண்ட தலைமைத்துவமும், நிர்வாகக் குழுவினரும் இலக்கொன்றை நோக்கி, பயணிப்பதுவே, அவ் அமைப்பின் செயற்பாடுகள் வெற்றியடைவதற்கான காரணமாகும். கட்டுக்கோப்பு, ஒற்றுமை, தியாகம், பொறுமை ஆகிய நற்பண்புகளுடனான இவ் அமைப்பில் பணியாற்றுபவர்கள், எந்தவொரு கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ளாமல், சுயமாகவும் இலவசமாகவும் தமது நேரத்தையும், உழைப்பையும், உணர்வுபூர்வமாக வழங்கி இயங்குகின்றனர். கிடைக்கும் நிதியை, வீண் விரயமின்றி முழுமையாக மக்களின் நலனுக்காகச் செலவிடுவதும், இவ் அமைப்பின் பண்பாகும். இவ்வாறானதொரு பின்னணியைக் கொண்டுள்ள 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' அமைப்பு, மக்கள் சேவையே, மகேசன் சேவை என்ற நிலையில் இயங்கிவருகின்றது.

> இந்திய வம்சாவளி மக்களினது வாழ்வில், ஒளி ஏற்றும் பாரிய பணியில் ஈடுபட்டு வரும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு, தனது இரண்டாவது ஆண்டு விழாவை, இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெறும் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, இன்று கொண்டாடுகின்றது

இவ் அமைப்பின் சேவைகள், கடந்த காலங்களில் சப்பிரகமுவ மாகாணத்திற்கு வெளியிலும் குறிப்பாக பதுளை, பசறை, தலவாக்கலை, லிந்துலை, கண்டி, மாத்தளை, களுத்துறை, தெனியாய போன்ற பிரதேசங்களில் பெருந்தோட்டப் பின்னணியைக் கொண்டவர்களையும் சென்றடைந்துள்ளன; சென்றடைந்தும் கொண்டிருக்கின்றன.

பெருந்தோட்ட மக்களின் ஆன்மிகம், கல்வி, கலை, கலாசார மேம்பாட்டுப் பணிகளுடன், சிறார்களுக்கு அறநெறிப் பாடசாலைகளையும் நடத்தி வருகின்றது. இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை ஊக்குவித்தல், விவசாயம், வீட்டுத்தோட்டச் செய்கைகளுக்கான உதவிகளை வழங்குதல், சுயதொழில் திட்டங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் போன்ற முற்போக்கான திட்டங்களுக்கும் பூரண பங்களிப்புகளையும், உதவிகளையும் வழங்கி வருகின்றது.

வறிய குடும்பங்களுக்கான குடிநீர் வசதியை ஏற்படுத்துதல், மலசல கூடங்களை அமைத்தல், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் போன்றவற்றையும் 'இரத்தினபுரி உதவும் கரங்கள்' மேற்கொண்டு வருகின்றது.

'இரத்தினபுரி உதவும் கரங்கள்' என்ற பெயரில் இவ் அமைப்பு இயங்கிய போதிலும் இந்திய வம்சாவளி பெருந்தோட்டத்துறை சார் மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் இவ்வமைப்பு சமூக மேம்பாட்டு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் தேசிய கல்லூரிகள் மூன்றிற்கு அதி நவீன வசதிகளைக் கொண்ட டிஜிட்டல் ஸ்மார்ட் பலகைகள் மற்றும் அதற்கான வகுப்பறைகளை ஏற்படுத்தியமை, மேலும் பல தமிழ்ப் பாடசாலைகளின் தேவை கருதி, பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தமை, வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கியமை, வாழ்வாதார உதவிகள் வழங்கியமை, பதுளை, பசறை ஆகிய பகுதியில் பெற்றோரை இழந்த மூன்று பிள்ளைகளுக்கு வீடொன்றினை நிர்மானித்துக் கொடுத்து, அப்பிள்ளைகளின் கல்வி மேம்பாடுகள், வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றமை, பசறை தமிழ் தேசிய கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கற்கும் திவ்வியப் பிரியா என்ற வறுமை நிலையிலுள்ள மாணவிக்கு கற்பதற்கு நிதி உதவிகள் வழங்கி வருகின்றமை, அம்மாணவியின் குடும்பத்திற்கு வீடொன்றினை நிர்மானித்துக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொண்டமை, கொவிட்- 19 தாக்கத்தால் பாதிப்படைந்தவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கியமை போன்ற செயற்பாடுகளையும், கடந்த வருடம் நவராத்திரி விழா குறித்த போட்டி நிகழ்வுகளை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு, வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகளையும் பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கி, ஆன்மிக ரீதியில் செயற்பட்டமை போன்றவற்றை இவ் அமைப்பு வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, இவ் அமைப்பு எந்தவோர் அரசியல் கட்சியையும் சார்ந்தது கிடையாது. எந்தவோர் அரசியல் பின்னணியையும் கொண்டதல்ல.

மலையகத்தின் பெருந்தோட்டப்புறமெங்கும் வீட்டிற்கொரு பட்டதாரியை உருவாக்கும் நோக்கத்துடன், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வறிய மாணவர்களுக்கு மாதாந்த உதவி நிதியை கிரமமாக வழங்குதல், தமிழ்ப் பாடசாலைகளுக்கான அதி நவீன வசதிகளைக் கொண்ட டிஜிட்டல் ஸ்மார்ட் பலகைகளை பொருத்துதல், பெருந்தோட்டப் பாடசாலைகளின் அடிப்படை வசதிகளான நீர் விநியோகத் திட்டம், மலசலகூட வசதிகள், கணினிகள், அச்சு இயந்திரங்கள் ஆகியனவற்றை தேவை கருதி வழங்குதல், க.பொ.த (சா/த), உயர்தரம் பயிலும் மாணவர்களின் பெறுபேற்றுகளை அதிகரிக்கும் நோக்கில், தரம் 9 தொடக்கம் 13 வரைக்குமான மாணவ, மாணவிகளுக்கு, இலவச பயிற்சிகள், செயலமர்வுகள் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், மாதிரி வினாத் தாள்களை அச்சிட்டு வழங்குதல், சிறார்களின் ஆன்மிகக் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு அறநெறிப் பாடசாலைகளுக்கான இலவச சீருடைகள், கற்கை உபகரணங்கள் வழங்குதல் போன்றவற்றை புதிய ஆண்டில் மேற்கொள்ள, 'இரத்தினபுரி உதவும் கரங்கள்'அமைப்பு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

வொஷிங்டன்

# ‘புட்டின் ஒரு போர்க் குற்றவாளி’

## அமெரிக்க பாராளுமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம்

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஒரு போர்க்குற்றவாளி என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அமெரிக்க பாராளுமன்றம். அமெரிக்க பாராளுமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது அரிதினும் அரிது.

அமெரிக்க பாராளுமன்றம் கருத்து வேறுபாடுகளால் எப்போதும் பிரிந்து கிடக்கும். ஆனால், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் போர்க் குற்றவாளி என்ற தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானத்தை குடியரசுக் கட்சி எம்.பி. லிண்ட்ஸே கிரஹாம் முன்மொழிந்தார். இதனை குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அனைவருமே ஆதரித்தனர். இத்தீர்மானம்,



ஹேக் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், இன்னும் பிற நாடுகளும் உக்ரேன் மீதான ரஷ்யப் படையெடுப்பில் உள்ள போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க ஊக்க சக்தியாக அமையும்.

இந்தத் தீர்மானம் குறித்து ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்றக் குழு தலைவர் சக் ஸ்கூமர் அவையில் பேசுகையில், “இந்த அவையில் உள்ள அனைவரும் இன்று (நேற்று) ஒரு விடயத்தில் உடன்பட்டுள்ளோம். ஜனநாயகவாதிகள், குடியரசுவாதிகள் என்ற பாகுபாடில்லாமல் ஒன்றுபட்டு, ரஷ்ய ஜனாதிபதி புட்டின், போர்க் குற்றவாளி என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். உக்ரேன் மக்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்டுள்ள வன்முறைகளுக்கு புட்டின் பொறுப்பேற்றே ஆக வேண்டும். அதிலிருந்து நிச்சயமாக புட்டினால் தப்பிக்க முடியாது” என்றார்.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# ஐந்தாமிடத்துக்கு முன்னேறிய கருணாரத்ன



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு இலங்கையணியின் தலைவர் திமுத் கருணாரத்ன முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 111 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே எட்டாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. ஜோ றூட், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. கேன் வில்லியம்ஸன், 5. திமுத் கருணாரத்ன, 6. றோஹித் ஷர்மா, 7. ட்ரெவிஸ் ஹெட், 8. பாபர் அஸாம், 9. விராட் கோலி, 10. றிஷப் பண்ட்.

இதேவேளை, இலங்கைக்கெதிரான குறித்த டெஸ்டில் எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா, 10ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ககிஸோ றபாடா, 4. ஜஸ்பிரிட் பும்ரா, 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, 6. கைல் ஜேமிஸன், 7. டிம் செளதி, 8. ஜேம்ஸ் அன்டர்சன், 9. நீல் வக்னர், 10. ஜொஷ் ஹேசில்வூட்.

இந்நிலையில், இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் 82 ஓட்டங்களையும், 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய ஜேஸன் ஹோல்டர், சகலதுறைவீரர்கள் பட்டியலில் முதலாமிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்கள் தரவரிசை பின்வருமாறு,

ஜேஸன் ஹோல்டர், 2. இரவீந்திர ஜடேஜா, 3. இரவிச்சந்திரன் அஷ்வின், 4. ஷகிப் அல் ஹஸன், 5. பென் ஸ்டோக்ஸ்.




சியோல்

# ஏவுகணை சோதனை தோல்வி

வட கொரியா, நடப்பு ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 10 முறை ஏவுகணை சோதனையை நடத்தி விட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், வடகொரியா ஏவிய ஏவுகணை ஒன்று நடுவானில் வெடித்து சிதறியதாக தென்கொரிய இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரிய ஏவுகணை சுமார் 20 கிலோ மீட்டர் உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது வெடித்து சிதறியதாக தென்கொரியா இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக செய்தி வெளியாகியுள்ளது. வெடித்துச்சிதறிய ஏவுகணை பற்றிய தரவுகள் எதுவும் தெரியவில்லை.

அடிஸ் அபாபா

# இரத்தம் குடித்து தொப்பை வளர்க்கும் ஆண்கள்

தொப்பையைக் குறைக்க எம்மில் பலரும் பல்வேறான, உடற்பயிற்சிகளை செய்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில், தொப்பை இருந்தால்தான், திருமணத்துக்கு பெண்களும் விரும்புவார்கள் என்றொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வினோத பழக்கம், ஆபிரிக்க கண்டத்தில் வாழும் எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த போடி என்ற பழங்குடியினர்களின் மத்தியில் உள்ளது.

திருமண சமயத்தில் தொப்பையோடு இருப்பதை மாப்பிள்ளையாகட்டும், மணப்பெண்ணாகட்டும் விரும்பவே மாட்டார்கள். தொப்பையில்லாமல் இருந்தால்தான் தாங்கள் அழகாக இருப்பதாகவே அவர்கள் கருதுவார்கள். ஆனால் இந்தக் கதையெல்லாம் இங்குதான். எத்தியோப்பியாவின் நிலையே வேறு. அங்கு



திருமணத்திற்காக என்றே ஸ்பெஷலாக தொப்பை வளர்க்கிறார்களாம் ஆண்கள்.

அதாவது இங்கு திருமணமாகாத ஆண்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் தொப்பை போட்டி என்று பிரத்யேகமாக நடத்தப்படுகிறது. இந்தப் போட்டிக்காக ஆறு மாதத்திற்கு முன்பிருந்தே தயாராக ஆரம்பித்து விடுகின்றனர் இங்குள்ள இளைஞர்கள். போட்டி நாளன்று யாருடைய தொப்பை பெரிதாக இருக்கிறதோ அவரே வெற்றி பெற்றவர். அவரை திருமணம் செய்து கொள்ள அங்குள்ள பெண்கள் போட்டி போடுவார்களாம்.

பாகிஸ்தான் எதிர் அவுஸ்திரேலியா:

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த 2ஆவது டெஸ்ட்



பாகிஸ்தான், அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கராச்சியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை 2 விக்கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பாகிஸ்தான், நாள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில், மொஹமட் றிஸ்வான் 104, நௌமன் அலி ஓட்டமெதுவும் பெறாமல் காணப்பட்டிருந்தனர். முன்னதாக, அணித்தலைவர் பாபர் அஸாம் 196, அப்துல்லாஹ் ஷஃபிக் 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். பந்துவீச்சில், நேதன் லையன் 4, அணித்தலைவர் பற் கமின்ஸ் 2, கமரொன் கிறீன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 556/9 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா160, அலெக்ஸ் கெரி 93, ஸ்டீவ் ஸ்மித் 72, நேதன் லையன் 38, டேவிட் வோர்னர் 36, பற் கமின்ஸ் ஆ.இ 34, கமரொன் கிறீன் 28, ட்ரெவிஸ் ஹெட் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: பாஹீம் அஷ்ரஃப் 2/55, சஜிட் கான்ட் 2/167, நௌமன் அலி 1/134, ஷகீன் ஷா அஃப்ரிடி 1/95, ஹஸன் அலி 1/71, பாபர் அஸாம் 1/7)

பாகிஸ்தான்: 148/10 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 36, நௌமன் அலி ஆ.இ 20, இமாம்-உல்-ஹக் 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/29, மிற்செல் ஸ்வப்ஸன் 2/32, நேதன் லையன் 1/13, கமரொன் கிறீன் 1/23, பற் கமின்ஸ் 1/39)

அவுஸ்திரேலியா: 97/2 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவஜா ஆ.இ 44, மர்னுஸ் லபுஷைன் 44 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 1/21, ஹஸன் அலி 1/23)

பாகிஸ்தான்: 443/7 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம்196, மொஹமட் றிஸ்வான் ஆ.இ 104, அப்துல்லாஹ் ஷஃபிக் 96 ஓட்டங்கள். பந்துவீச்சு: நேதன் லையன் 4/112, பற் கமின்ஸ் 2/75, கமரொன் கிறீன் 1/32)

போட்டியின் நாயகன்: பாபர் அஸாம்

# சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்ட யுனைட்டெட்



சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் வெளியேற்றப்பட்டது.

ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்றிட்டுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே யுனைட்டெட் வெளியேற்றப்பட்டுள்ளது.

அத்லெட்டிகோவின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்த நிலையில், யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 0-1 என யுனைட்டெட் தோல்வியடைந்தது. அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை றெனான் லொடி பெற்றார்.



பெரு

# நிலச்சரிவில் 60 வீடுகள் புதைந்தன

பெரு நாட்டின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பார்கோய் மாவட்டத்தில் மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 60 வீடுகள் மண்ணில் புதைந்துவிட்டதாகவும், மேலும் 80 வீடுகள் சேதமுற்றதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மீட்புப்பணிகளை தீவிரப்படுத்தியுள்ள அதிகாரிகள், வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களை முகாம்களில் தங்க வைத்துள்ளனர். மலைப்பகுதியில் விதிகளை மீறி வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும், அந்த வீடுகளே நிலச்சரிவில் சிக்கியுள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.



தர்மசாலா

# சீனாவுக்கு எதிராக திபெத்திய பெண்கள் ஆர்ப்பாட்டம்

நாடுகடத்தப்பட்ட நூற்றுக்கணக்கான திபெத்திய பெண்கள், திபெத்தின் சுதந்திரத்துக்காக சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மற்றும் முழக்கங்களை மலை நகரமான தர்மஷாலாவில் எழுப்பினர்.

திபெத்திய தேசிய பெண்கள் எழுச்சி தினத்தின் 63ஆவது ஆண்டு நினைவு தினத்தை நினைவுகூர்ந்த போதே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

“1959 ஆம் ஆண்டு திபெத்திய பெண்கள் திபெத்தில் போராட்டம் நடத்தியதை நினைவுகூர்கிறோம் என்றும் திபெத்தில் வாழும் திபெத்தியர்களுக்கு சுதந்திரம் வேண்டும்” என்றும் போராட்டத்தை நடத்திய திபெத்திய பெண்கள் சங்கத்தின் ஆர்வலர் லாமோ கூறினார்.

திபெத்தின் நிலைமையைப் பார்த்து, திபெத்தில் நடந்த மொத்த மனித உரிமை மீறல்களுக்கு சீனாவை பொறுப்பேற்க வேண்டும் என்று நாங்கள் உலகத்தையும் சர்வதேச சமூகத்தையும் கோருகிறோம் என, திபெத்துக்கான மாணவர்களின் ஆர்வலர் டென்சின் பாசாங் தெரிவித்தார்.

மருதூர் பிறீமியர் லீக்:

# இன்று இறுதிப் போட்டி





அஸ்ஹர் இப்றாஹீம்

சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்து நடாத்திக் கொண்டிருக்கும் 15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடின பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளையும் சேரந்த 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற் கடந்த 6 மாத காலமாக இடம்பெற்றுவந்த இத்தொடரின் இறுதிப் போட்டி கல்முனை டொப்ரேங் விளையாட்டுக் கழகத்துக்கும், சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெறவுள்ளது.

சாய்ந்தமருது கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் ரீ.கே. எம். ஜலீல் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் கௌரவ அதிதியாகவும், அம்பாறை மாவட்ட கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் இந்திக நளின் ஜயவிக்ரம ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் கழகத்துக்கு 25,000 ரூபாய் பணப்பரிசும், சம்பியன் கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

வொஷிங்டன்

# புதிய கூட்டணியை உருவாக்க முயற்சி

நேட்டோ, ஜி-7 ஆகிய அமைப்புகளை தவிர, உலகளாவிய புதிய கூட்டணியை உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளும் பொருளாதார தடைகளை விதித்து வருகின்றன. சீனா மட்டுமின்றி இந்தியா, பிரேசில், மெக்சிகோ போன்ற நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார போரில் பங்கேற்கவில்லை. ஆனால், இது ரஷ்யாவிற்கு எதிரான நடவடிக்கைகளை குறைத்து மதிப்பிடுவதாக கருத முடியாது. உலகளாவிய கூட்டணியை உருவாக்குவதற்கு அமெரிக்கா முயன்று வருகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 17 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.